02. சேவை நிபந்தனைகள்:-

2.1 அரசாங்க சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் PSC/EST/4/1 ஆம் இலக்க மற்றும் 2012.06.22 ஆம் திகதியிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் அதியுயர் வகுப்பு உத்தியோகத்தர் வகைக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அவ் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு செய்யப்பட்டுள்ள அல்லது இதனகத்துப் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக் கோவையின் நிதி ஒழுங்குவிதி ஏற்பாடுகளுக்கும் 1589/ 30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் கோவைகளுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நிலையப் பொறுப்பதிகாரி பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

2.2 இப் பதவி நிரந்தரமானது. அத்துடன் ஓய்வூதியத்துடன் கூடிய, விதவைகள் மற்றும் அநாதைகள் /தபுதாரர் அநாதைகள், ஓய்வூதியத் திட்டத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்படல் வேண்டும்.

2.3 இந்த நியமனம் ஓராண்டு பதில் கடமைக் காலத்துக்கு உட்பட்டதாகும்.

2.4 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகள் பிரகாரம் பதவிக்கு அமர்த்தப்பட்டு 5 ஆண்டு காலத்திற்குள் உரியவாறு அரசகரும மொழிகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

03. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**.- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் பிரகாரம் MN 7-2016 சம்பளத் தொகுதியின் 06 ஆம் படிநிலை இப் பதவியின் ஆரம்ப சம்பளப் படிநிலை ஆகும்.

சம்பள அளவுத் திட்டம் - MN- 7 2016- ரூபா 41,580.00- 11×755-18×1030 - ரூபா 68,425.00.

ஆரம்ப சம்பளப் படிநிலை- ரூபா 45,355.00 ஆகும்.

04. **ஆட்சேர்ப்பதற்கான தகைமை**:-

(அ) i. இலங்கைப் பிரசையாக இருத்தல்.
ii. சிறந்த நன்னடத்தை கொண்டவராக காணப்படல்.
iii. தீவின் எப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு உகந்த உடலாரோக்கியம் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

பட்டச் சான்றிதழ் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள்

I. சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

மற்றும்

II. அப் பதவியில் ஐந்து (05) ஆண்டுகள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**பட்டச் சான்றிதழ் பெற்றிராத விண்ணப்பதாரர்கள்**

I. சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

மற்றும்

II. அப் பதவியில் பத்து (10) ஆண்டுகள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

*குறிப்பு :-*

**பூர்த்தி செய்திருக்க வேண்டிய ஏனைய தகைமைகள்**

i. இப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

ii. கிட்டிய 05 ஆண்டு காலத்திற்குள் எந்தவொரு ஒழுக்காற்று தண்டனையும் விதிக்கப்படாதிருத்தல்.

iii. கிட்டிய 05 ஆண்டு காலத்திற்குள் அனைத்து சம்பளவேற்றங்களும் உரிய திகதியில் உழைத்துக் கொள்ளப்பட்டிருத்தல்.

05. **விண்ணப்பிக்கும் முறை :-**

(அ) விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைய காணப்பட வேண்டும் என்பதுடன் கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து ஏ4 (A4) அளவு ஒரு கடதாசியில் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 முதல் 1:11 வரை முதற் பக்கத்திலும், 2.0 முதல் 3.0 வரை இதன் இரண்டாம் பக்கத்திலும் மீதி மூன்றாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டுமென்பதனை விசேடமாக கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். இதற்காக கணினி மூலம் தயாரிக்கப்பட்ட/ தட்டச்சு பொறிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களையும் பயன்படுத்தமுடியும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் தகவல்கள் தனது கையெழுத்தில் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும் என்பதுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக காணப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பூர்த்தியற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை தம் வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.

(ஆ) அபேட்சகர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழி மூலத்தில் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினைத் தயார் செய்யும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுவது அத்தியவசியம் ஆகும்.

(இ) I. சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை நிறுவனத் தலைவர் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2022.03.23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடிதவுறையின் இடப்பக்க மேல் மூலையில் தெளிவாக "சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நடாத்திச் செல்லப்படும் தொழிற்பயிற்சி நிலையங்களில் நிலவும் நிலையப் பொறுப்பதிகாரி பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2022" எனக் குறிப்பிட்டு "பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 2ஆம் மாடி, செத்சிரிபாய, II ஆம் கட்டம், பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அன்றைய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

II. பரீட்சைக் கட்டணம் ரூ.1200.00 ஆகும். "பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், இலங்கை வங்கி, பத்தரமுல்ல கிளை, கணக்கு இலக்கம் 7041285" இல் வைப்புச் செய்யும் வகையில் தீவின் எப்பாகத்திலும் அமைந்துள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியினை தம் வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும். எந்தவொரு விடயத்துக்காகவும் அக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. இப் பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை ஏனைய பரீட்சை ஒன்றுக்கு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணத்துக்காக முத்திரை அல்லது காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) அனைத்து விதத்திலும் பூர்த்தியாகாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. **பரீட்சைக்கான நுழைவு** .- விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்குவார். தனது அனுமதி அட்டையினை சமர்ப்பிக்காத அபேட்சகர் ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**குறிப்பு.**- அபேட்சகர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

07. **அபேட்சகர்களின் அடையாளம்** .- தான் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் அபேட்சகர் ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளத்தை உறுதிசெய்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

08. இவ் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு சமூக சேவைகள் பணிப்பாளரால் தீர்மானிக்கப்படும் விதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

09. பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழிமூலம் :-
(அ) பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் கொழும்பில் நடாத்தப்படும்.
(ஆ) அபேட்சகர் ஒருவர் தான் தகைமை பெற்ற பட்டச்சான்றிதழைப் பெற்றுக்கொண்ட மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.
(இ) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அபேட்சகர் ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

10. **ஆட்சேர்ப்புத் திட்டம்** .-
**எழுத்துப் பரீட்சை** .- (நிலையப் பொறுப்பதிகாரி பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை) வேலை மற்றும் ஆளணி முகாமைத்துவம் பற்றிய சம்பவக் கற்கை தொடர்பான 100 புள்ளிகளைக் கொண்ட 03 மணித்தியால கட்டுரை மற்றும் கட்டமைப்பு ரீதியிலான கட்டுரை வகையில் அமைந்த ஒரு வினாப்பத்திரம் ஆகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும். சித்தியடைவதற்காக 40% இற்கு குறையாத புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

வேலை மற்றும் ஆளணி முகாமைத்துவம் பற்றிய விண்ணப்பதாரர்களின் கிரகித்தல் மற்றும் அறிவாற்றல் என்பவற்றை மதிப்பீடு செய்வதற்காக தாபன நிர்வாகம், முகாமைத்துவ பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல் மற்றும் அப் பிரச்சினைகளைத் தீர்த்தல், தாபன ரீதியான விளைதிறன் மற்றும் செயற்திறனை அதிகரித்தல் போன்ற வேலை மற்றும் ஆளணி முகாமைத்துவம் தொடர்பான ஒரு சம்பவம் அல்லது பல சம்பவங்களில் இருந்து தயாரிக்கப்படும் கட்டுரைகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையில் அமைந்த வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**நேர்முகப் பரீட்சை** -
எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்களுள் 40% புள்ளிகளுக்கு குறையாத புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவின் கீழ் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

**நிலையப் பொறுப்பதிகாரி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகள்**

01. புள்ளிகள் வழங்கப்பட வேண்டிய துறைகள்

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|
| 01. **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>(ஆட்சேர்ப்பு அறிவித்தல் இலக்கம் 04 இன் கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளுக்கு மேலதிகமாக உள்ள தகைமைகளுக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்)<br>1. பட்டப்பின் பட்டம் (10)<br>(சமூகவிஞ்ஞானம்/நிர்வாகம்/முகாமைத்துவம் தொடர்பாக)<br>2. முதலாம் வகுப்பு பட்ட சித்தி (08)<br>3. வகுப்பு சித்தியுடனான பட்டம் தொடர்பில் (06)<br>(இங்கு ஏதேனும் பாடங்கள் முன்னைய வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு மீண்டும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது) | 10 |

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|
| **02. மேலதிக தொழில் தகைமைகள்**<br><br>பதவிக்கு ஏற்புடைய துறையில்<br><br>1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து அல்லது நியமன அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட ஓராண்டுக்கு குறையாத சமூகப் பணிகள்/ நிர்வாகம்/ மதியுரை/ முகாமைத்துவம் ஆகிய பாடங்களுக்கான டிப்ளோமாச சான்றிதழைப் பெற்றிருத்தல். (15)<br><br>2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து அல்லது நியமன அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட 06 மாதங்களுக்கு குறையாத சமூக விஞ்ஞானப் பாடம்/ நிர்வாகம்/ முகாமைத்துவம் ஆகிய பாடங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல். (சமிக்ஞை மொழி தொடர்பான டிப்ளோமா, பிரேல் டிப்ளோமா) (10)<br><br>3. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து அல்லது நியமன அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட 03 மாதங்களுக்கு குறையாத சமூக விஞ்ஞானப் பாடத் துறை/நிர்வாகம்/முகாமைத்துவம் ஆகிய பாடங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல். (05) | 15 |
| **03. மேலதிக அனுபவம்**<br>(அடிப்படைத் தகைமையாக கருத்திற் கொள்ளப்படும் 05 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஓர் ஆண்டுக்காக)<br>1. தரம் II பதவியில் ஓர் ஆண்டுக்காக (03)<br>2. தரம் I பதவியில் ஓர் ஆண்டுக்காக (05) | 40 |
| **04. கணினி பற்றிய ஆற்றல்**<br><br>(ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்)<br><br>1. நியமன அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கணினி தொடர்பான ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கான டிப்ளோமா/ சான்றிதழ் பெற்றிருத்தல். (05)<br><br>2. நியமன அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கணினி/ தொடர்பான 06 மாத காலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கான டிப்ளோமா/ சான்றிதழுக்காக (03) | 05 |

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|
| 05. **ஆங்கில மொழித் திறமை**<br><br>(ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்)<br><br>1. ஆங்கில மொழியில் முதலாவது பட்டம்/பட்டப் பின் பட்டம்/பட்டப்பின் டிப்ளோமா பூர்த்தி செய்திருத்தல்/ஆங்கில மொழியினை ஒரு பாடமாக் கொண்ட பட்டம் சித்தி பெற்றிருத்தல்/ க.பொ.த.(உ.த.) ஆங்கிலத்தை ஒரு பாடமாக கொண்டு சித்தி பெற்றிருத்தல் (05)<br><br>2. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்த பெற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கிலப் பாடம் தொடர்பான ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா/சான்றிதழ் அல்லது க.பொ.த.(சா.த.) ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல். (03)<br><br>3. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்த பெற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கிலப் பாடம் தொடர்பான 06 மாத கால அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா/சான்றிதழ் அல்லது க.பொ.த.(சா.த.) ஆங்கிலப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல். (02)<br><br>4. ஆங்கிலப் பாடம் தொடர்பான 03 மாத காலத்துக்கு குறையாத சான்றிதழ் பாடநெறிக்காக (01) | 05 |
| 06. **தொழில்சார் துறையில் மேற்கொண்டுள்ள விசேட செயற்பாடு கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள்/கருத்திட்டங்களுக்காக**<br><br>(மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலாளரால் பரிந்துரை செய்யப்படல் வேண்டும்)<br><br>1. அங்கவீனமுற்ற நபர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட படைப்பாற்றல் மிக்க செயற்பாடுகள் (தேசிய மட்டம் வரை பிரதேச மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகள்) (05)<br><br>2. சுவசக்தி குழுக்கள்/ தொண்டர் முகவர்கள் மூலமான சமுதாய அடிப்படை/வெற்றிகரமான செயற்பாடுகள். (05)<br><br>3. பிரதேச அல்லது மாவட்ட அங்கவீன அல்லது விடய எல்லையுடன் தொடர்புடைய நன்மை பெறுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேசிய/ சர்வதேச வெற்றிகள் வரையான கருத்திட்டங்கள் (05)<br><br>4. நன்மை பெறுநர்களை வலுவூட்டுவதற்காக திணைக்களங்கள் மற்றும் ஏனைய அமைச்சுக்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள நன்மைகள் மற்றும் ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக படைப்பாற்றலுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் (05)<br><br>5. ஏனைய விசேட செயற்பாடுகள் /நிகழ்ச்சித்திட்டங்கள் (05) | 20 |
| 07. நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமை | 05 |
| **மொத்த புள்ளிகள்** | 100 |

4.0 விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை

............................................ ஆந் திகதிக்கு அண்மித்த ஐந்து ஆண்டு கால எல்லைக்குள் வேதனவேற்றங்கள் அனைத்தும் என்னால் உழைக்கப்பட்டுள்ளது என்பதையும், வர்த்தமானியின் 04 ஆ பந்தியின் பிரகாரம் ................ ஆந் திகதிக்கு செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ளேன் என்பதையும் (எச்சரிக்கை விடுத்தல் தவிர்ந்த) எந்தவொரு விதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் நான் ஆளாகவில்லை என்பதையும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தால் பரீட்சை நடாத்தப்படல் மற்றும் பெறுபேறு வெளியிடப்படல் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாகவும் வெளிப்படுத்துகின்றேன்.

வர்த்தமானியில் குறிப்பிடப்படும் அனைத்து சட்டவிதிகள் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியானவன் என்பதையும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய உண்மையானது என்பதையும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................. ஆம் இலக்கமுடைய ................. ஆந0 திகதிய பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்துகிறேன். பரீட்சை சட்ட விதிகளுக்கு அமைய செயற்படுவதற்கும் இப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகள் உள்ளிட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் நான் தகைமை அற்றவன் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எனது பரீட்சை அபேட்சகர் அந்தஸ்தினை இரத்துச் செய்வதற்கு நான் சம்மதம் தெரிவிக்கின்றேன்.

திகதி: ........................................ ..............................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

5.0 திணைக்களத் தலைவரின் சான்றுரை (விண்ணப்பதாரரின் தனிப்பட்ட கோப்புக்கு அமைய)

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .............................. சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் பதவியில் சேவையாற்றுவதாகவும், ............................ ஆந் திகதிக்கு அண்மித்த ஐந்து ஆண்டு கால எல்லைக்குள் அவரது வேதனவேற்றங்கள் அனைத்தும் உழைக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த கால எல்லைக்குள் குற்றம் ஒன்று தொடர்பில் /(எச்சரிக்கை விடுத்தல் தவிர்ந்த) எந்தவொரு விதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் அவர் ஆளாகவில்லை என்பதாகவும், வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆ பந்திக்கு அமைவாக ................ (ஐந்து /பத்து) ஆண்டுகள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ளார் எனவும், ஏற்புடைய வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் பிரகாரம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பப்படிவத்தில் கையொப்பம் இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

..........................................................
திணைக்களத் தலைவரின் / அதிகாரம் பெற்ற
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பதவி :............................................
பதவிப் பெயர் :............................................
திகதி :............................................
(பதவி முத்திரையினை இடவும்)

02-212